30.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 'அரசு மானியத்துடன் எருமைப் பண்ணைகள் அமைக்க விண்ணப்பிக்கலாம்'

தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு மானியத்துடன் எருமைப் பண்ணைகள் அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தூத்துக்குடி மாவட்டத்தில் எருமை வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 6 எருமைப் பண்ணைகள் அமைத்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதில், முதல்கட்டமாக 4 எருமைப் பண்ணைகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எருமைப் பண்ணை அலகு ஒன்று 5 எருமைகள் கொண்டதாக இருக்கும். முதலில் 3 எருமைகள் வாங்கி வழங்கப்படும். எருமைப் பண்ணை அலகு ஒன்றின் மொத்த நிதி ரூ.4,32,500 ஆகும். இதில், 25 சதவீதம் நிதி ரூ.1,08,125 மட்டும் பயனாளிகளால் செலுத்தப்பட வேண்டும். மீதமுள்ள 75 சதவீத நிதி ரூ.3,24,375 அரசு மானியமாக வழங்கப்படும். பயனாளிகளில் 30 சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

பயனாளிகளுக்கு 300 சதுர அடி காலியிடம் மாட்டுக்கொட்டகை அமைத்திட இருத்தல் வேண்டும். மேலும், ஒரு ஏக்கர் நிலப்பரப்பு கால்நடை தீவனப்பயிர்கள் மற்றும் தீவனப்புல் வளர்த்திட சொந்தமாகவோ குத்தகை நிலமாகவோ இருந்திட வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தில் பயனாளியின் பெயர், பாலினம், வயது, ஜாதி விவரம், முகவரி, தொடர்பு தொலைபேசி எண் மற்றும் தற்போது பயனாளிகளிடமுள்ள பசு மாடுகள் மற்றும் எருமை இனங்கள் விவரம் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

மேலும், இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஜாதி சான்றிதழ் நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், நிலத்திற்கான பட்டா நகல், வங்கி கணக்கு புத்தக நகல் ஆகியவை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சியரால் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பயனாளிகள் பட்டியல் தேர்வு செய்யப்படும். பயனாளிகள் எருமைகளை குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் வரை தொடர்ந்து வளர்த்திட வேண்டும். தவறும் பட்சத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 25 சதவீத தொகை ரூ.1,08,125 சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் கணக்கில் வரைவோலையாக செலுத்த வேண்டும்.

மேலும் 300 சதுரஅடி நிலப்பரப்பில் கொட்டகை கட்டுவதற்கு மதிப்பீடான ரூ.1,50,000 செலவில் கட்ட வேண்டும். கால்நடை தீவனப்புல் 24 சென்ட் நிலப்பரப்பில் வளர்த்திட புல் கரணைகள் மற்றும் உரம் வாங்கிடும் வகையில் ரூ.2,600 மற்றும் 76 சென்ட் நிலப்பரப்பில் டெஸ்மாந்தஸ் தீவனப்புல் விதைகள் மற்றும் உரம் வாங்கிடும் வகையில் ரூ.4400 மற்றும் ஒரு தெளிப்பு நீர் பாசன கருவி நிறுவுவதற்கு ரூ.25,000 மற்றும் ஒரு புல் வெட்டும் கருவி வாங்கிட ரூ.20,000 ஆக மொத்தம் ரூ.52,000 கால்நடை தீவனம் ஒரு ஏக்கர் நிலத்தில் உற்பத்தி செய்வதற்காக வழங்கப்படும்.

முர்ரா இன எருமைகள் முதல்கட்டமாக மூன்று எருமைகள் பிற மாநிலத்தில் இருந்து வாங்கி வழங்கப்படும். எருமை ஒன்றின் விலை ரூ.40,000 வீதம் மொத்தம் 5 எருமைகள் வாங்கிட ரூ.2,00,000 நிதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எருமைகளை காப்பீடு செய்வதற்கு ரூ.10,000 மற்றும் போக்குவரத்து கட்டணம் ரூ.10,000 வழங்கப்படும்.

மேலும், எருமைப் பண்ணை அமைத்திட தேவையான உபகரணங்கள் வாங்கிட ரூ.10,000 வழங்கப்படும். மேலும் இரண்டு நாள்கள் மாவட்ட தலைமையிடத்தில் வைத்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பேராசிரியர்களால் பயிற்சி வழங்க ரூ.500 செலவினம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பால் பண்ணையில் இந்தத் திட்டம் மூலம் வழங்கப்பட்ட எருமைகளின் பால் அருகில் உள்ள பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு வழங்க வேண்டும். இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் தங்கள் பகுதியைச் சேர்ந்த கால்நடை உதவி மருத்துவரை தொடர்பு கொண்டு ஜூலை 30

ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை அளித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண் காய்கறி விற்பனை அங்காடி திறப்பு**



ஆத்துப்பாக்கத்தில், புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட வேளாண்மை காய்கறி விற்பனை அங்காடி.

பெரியபாளையம் அருகே ஆத்துப்பாக்கத்தில் தமிழக அரசின் புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ், வேளாண்மை காய்கறி விற்பனை அங்காடி வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

புதுவாழ்வுத் திட்டத்தின் மூலம் வேளாண்மை தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரையும் இணைத்து தொழில் குழு ஆரம்பிக்கப்பட்ட நிலையில், தற்போது காய்கறி சாகுபடி செய்யும் பெண்களை இணைத்து 38 வேளாண் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த குழுக்களுக்கு புது வாழ்வுத் திட்டத்தின் உள் கட்டமைப்பு நிதியின் மூலம் தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இதில், பூச்சி தெளிப்பான், களை எடுப்பான் இயந்திரம் ஆகியவற்றை கொள்முதல் செய்தனர்.

இந்நிலையில் ஆத்துப்பாக்கம் வேளாண் குழுவின் சார்பாக ஆத்துப்பாக்கம், தும்பாக்கம், வண்ணான்குப்பம், தண்டலம், காக்கவாக்கம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளில் காய்கறி விளைபொருள்களை வெளிச்சந்தையில் தரகர்கள் இன்றி நேரடியாக விற்கும் நோக்கில், ஆத்துப்பாக்கத்தில் பெரியபாளையம் பவானி அம்மன் கோயிலை ஒட்டி வேளாண்மை காய்கறி விற்பனை அங்காடி ஆரம்பிக்கப்பட்டது. இதன் தொடக்க விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

எல்லாபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் அம்மினி மகேந்திரன் தலைமை வகித்தார். ஆத்துப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அம்லு ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். புதுவாழ்வுத் திட்ட அணி தலைவர் ஏ.நாகராஜ் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட புதுவாழ்வுத் திட்ட மேலாளர் எஸ்.சிவகாமி ஸ்ரீகிருஷ்ணா கலந்துகொண்டு, வேளாண் காய்கறி விற்பனை அங்காடியைத் திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் ஆலோசகர் தாமஸ் ரெக்ஸ் வாஸ், புதுவாழ்வுத் திட்ட உதவி மேலாளர்கள் சந்தோஷ், சுபான், குணசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர். முடிவில் ஒருங்கிணைப்பாளர் ஜி.கோட்டீஸ்வரி நன்றி கூறினார்.

## மாவட்டத்தில் பரவலாக மழை: திருமங்கலம், கள்ளிக்குடி பகுதிகளில் சிறுதானியங்கள் பயிரிட ஆலோசனை

மதுரை மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி, திருமங்கலம், கள்ளிக்குடி, சேடப்பட்டி, தே.கல்லுப்பட்டி வட்டார விவசாயிகள் சிறுதானியங்கள், பயறு வகைகள் பயிரிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை வெளியிட்டுள்ள செய்தி: மதுரை மாவட்டத்தில் ஜூலை மாதத்தில் சராசரியாக 44 மிமீ கிடைக்கும். இதில் புதன்கிழமை (ஜூலை 27) வரை 87 மிமீ மழை கிடைத்துள்ளது. முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் இந்த ஆண்டு கூடுதலான மழை பதிவாகி இருக்கிறது. கடந்த வாரத்தில் இருந்து பெய்து வரும் மழை காரணமாக திருமங்கலம், கள்ளிக்குடி, கல்லுப்பட்டி, சேடபட்டி வட்டாரங்களைச் சேர்ந்த விவசாயிகள் உழவுப் பணியை முடித்து விதைப்பிற்கு தயாராகி வந்தனர். இந்நிலையில், இப்போது பெய்து வரும் மழை விவசாயிகளுக்கு கைகொடுக்கும் வகையில் உள்ளது.

கடந்த ஆண்டு (2015-16) மதுரை மாவட்டத்தில் 3.14 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நிகழ் ஆண்டுக்கு 3.17 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சர்வதேச பயறு ஆண்டு என்பதால், பயறு வகைகள் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தில் உளுந்து மற்றும் பாசிபயறு தொகுப்பு செயல்விளக்க திடலுக்கு ஹெக்டருக்கு ரூ.5 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. சான்று விதை, பயிர் பாதுகாப்பு மருந்து, நுண்ணூட்ட சத்து, ஜிப்சம் விசைத் தெளிப்பான், ரோட்டவேட்டர், குழாய் இணைப்பு ஆகியவற்றுக்கும் இத்திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது.

சோளம், கம்பு, மக்காச்சோளம் பயிர்களில் அனைத்து தொழில்நுட்பங்களையும் கடைபிடித்து தொகுப்பு செயல்விளக்கம் அமைக்க ஹெக்டருக்கு ரூ.4 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. வேளாண் விரிவாக்க மையங்களில் பயறு வகை விதைகள் உள்ளிட்ட இடுபொருள்கள் தேவையான அளவு இருப்பு உள்ளதால் விவசாயிகள் அரசின் மானியத் திட்டத்தில் இவற்றைப் பெற்று பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "மானிய விலையில் நெல் விதைகள் விநியோகம்'

நிலக்கோட்டை வேளாண்மை துறை அலுவலகத்தில் நெல் நடவுக்கான வேளாண் இடு பொருள்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் கா.முருகன் தெரிவித்தது: பெரியாறு - வைகை கால்வாய் மூலம் விரைவில் நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடும் சூழ்நிலை உருவாகி வருவதால், நிலக்கோட்டை மற்றும் விளாம்பட்டி வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் என்எல்ஆர் 34449 (சான்று) இ.கோ.ஆர்.51 (சான்று) நெல் விதைகள் மற்றும் நெல் நுண்ணூட்ட உரம், பயறு வகை நுண்ணூட்ட உரம் மற்றும் சிறுதானிய நுண்ணூட்ட உரம் ஆகியவை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றார்.

## மொடக்குறிச்சியில் தேங்காய், கொப்பரை ஏலம்

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 4 லட்சத்துக்கு தேங்காய், கொப்பரை ஏலம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மொடக்குறிச்சி மற்றும் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 206 மூட்டையில் 5 ஆயிரத்து 623 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், முதல் தரம் அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 52.15-க்கும், குறைந்த பட்ச விலை ரூ. 49.25-க்கும், இரண்டாம் தரம் அதிகபட்ச விலை ரூ. 46.65-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 37.40-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 2 லட்சத்து 78 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதேபோல், 15 ஆயிரத்து 539 கிலோ எடையுள்ள 39 ஆயிரத்து 818 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்ச விலையாக டன்னுக்கு ரூ. 13 ஆயிரத்து 796-க்கும், குறைந்தப்பட்ச விலை டன்னுக்கு ரூ. 10 ஆயிரத்து 507-க்கும், சராசரி விலை ரூ. 12 ஆயிரத்து 800-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 1 லட்சத்து 98 ஆயிரத்துக்கும் விற்பனை நடைபெற்றது.

## அரூரில் 63 மி.மீ மழை பதிவு

அரூர் வட்டாரப் பகுதியில் வெள்ளிக்கிழமை 63.20 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

அரூர், தீர்த்தமலை, கோட்டப்பட்டி, சித்தேரி, வள்ளிமதுரை உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் கனமழை பெய்தது. இந்த மழையளவு 63.20 மில்லி மீட்டராகப் பதிவாகியுள்ளது. கன மழையின் காரணமாக வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. நரிப்பள்ளி கல்லாறு, வள்ளிமதுரை வரட்டாற்றில் லேசாக தண்ணீர் ஓடுகிறது. இதேபோல, பாப்பிரெட்டிப்பட்டி சுற்றுவட்டாரப் பகுதியில் 20 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் கடந்த 15 தினங்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருவதால், நெல் நடவு செய்தவற்காக நாற்று விடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

### கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்வதையடுத்து, கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது.

கர்நாடக மாநிலம், பெங்களூரு மற்றும் தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் தென்பெண்ணை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கிருஷ்ணகிரி அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வரும் நிலையில் வெளியேற்றும் நீரின் அளவு முற்றிலும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. கடந்த மூன்று நாள்களில் அணையின் மொத்த உயரமான 52 அடியில் 43 அடி நீர்மட்டம் இருந்தது. வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் அணையின் நீர்வரத்து 1,200 கன அடியாக இருந்த நிலையில், நீர்மட்டமானது 46.2 அடியாக உயர்ந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 12 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

விவசாயிகள் எதிர்பார்ப்பு: கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் அதிகரித்து வரும் நிலையில், முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்தை வலியுறுத்தி வருகின்றனர். கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் 47 அடியை எட்டியவுடன் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் அறிவித்தார். இந்த நிலையில், விரைவில் அணையின் நீர்மட்டம் 47 அடியை எட்டிவிடும் என விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### கெலவரப்பள்ளி அணை நிரம்பியது

ஒசூர் கெலவரப்பள்ளி அணை நிரம்பியதால், அணைக்கு வரும் மொத்த தண்ணீரும் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தின் நீர்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால், ஒசூர் கெலவரப்பள்ளி அணைக்கு வரக்கூடிய நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஒசூர் கெலவரப்பள்ளி அணையின் உச்சபட்ச நீர்மட்டம் 44.28 அடியாகும். வெள்ளிக்கிழமை அணையின் நீர்மட்டம் 43 அடியாகும். அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 2,300 கன அடியாகும்.

இதனால் தென்பெண்ணை ஆற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் காரணமாக காமன்தொட்டி, ஆலூர், பாத்தகோட்டா உள்பட பல கிராமங்களில் தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் அதிகளவில் செல்கிறது. இதனால் தரைப் பாலங்கள் நீரில் மூழ்கியதால் காமன்தொட்டி, பாத்தகோட்டா உள்பட 22 கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரும், பொது மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**வெண்டை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம்**

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகேயுள்ள பூசாரிக்கொட்டாய் பகுதியில், வெண்டை சாகுபடி குறித்து நுஜிவீடு விதைகள் நிறுவனம் சார்பில் விவசாயிகளுக்கு அண்மையில் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

வெண்டை சாகுபடிக்கு புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள நுஜிவீடு நிறுனத்தின் ரோகிணி வெண்டை தன் சிறப்பியல்புகளால் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதன் அடர் பச்சைநிற காய்கள், அதன் நீளம் சுனை குறைவாக இருப்பதால் வெளிச் சந்தையில் நல்ல விற்பனையாகிறது. இதில் மஞ்சள், தேமல் நோய் தாக்குதல் இல்லாததால், விவசாயிகள் ரோகிணி வெண்டையை தேர்ந்தெடுத்து பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதையடுத்து, பூசாரிக்கொட்டாய் பகுதியில் ரோகிணி வெண்டை சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் தோட்டங்களில், தமிழக மண்டல விற்பனை மேலாளர் பாப்பையன் செயல் விளக்கம் அளித்து கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, ரோகிணி வெண்டை சாகுபடி செய்து சுமார் 3 மாத காலமாக விற்பனை செய்து நல்ல லாபம் ஈட்டிய விவசாயி அண்ணாமலையைப் பாரட்டி மண்டல விற்பனை மேலாளர் பாப்பையன் நினைவுப் பரிசு வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நுஜிவீடு விதைகள் நிறுவனத்தின் விற்பனை மேலாளர் தட்சிணாமூர்த்தி, விற்பனை அலுவலர் குழந்தைவேல் ஆகியோர் செய்திருந்தனர்.

## சேலத்தில் 452 மி.மீ. மழை பதிவு

சேலம் மாவட்டத்தில் வியாழக்கிழமை இரவு சுமார் 452 மி.மீ. அளவுக்கு மழை பெய்துள்ளது.

சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வியாழக்கிழமை இரவு விடிய விடிய மழை பெய்தது.

இதில் காடையம்பட்டி பகுதியில் பெய்த மழையால் தரைப்பாலம் முழுவதும் சேதமடைந்தது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் புகுந்தது. அதேபோல ஏற்காடு மலைப் பகுதியில் பலத்த மழை பெய்தது.

இதில், மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம்:

ஓமலூர் -98, பெத்தநாயக்கன்பாளையம் -73, மேட்டூர்- 60, ஏற்காடு -56, கரியகோயில் -32, சேலம்-25, தம்மம்பட்டி-21, எடப்பாடி-20, வாழப்பாடி-19, ஆத்தூர் -15, கெங்கவல்லி, ஆனைமடுவு-14, சங்ககிரி-3 என மாவட்டத்தில் மொத்தம் 452 மி.மீ. அளவுக்கு மழை பெய்துள்ளது.

## பாபநாசம்: நுண்ணீர் பாசன பராமரிப்பு திட்டப் பயிற்சி

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில், விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன பராமரிப்புத் திட்டப் பயிற்சி அண்மையில் வழங்கப்பட்டது.

முகாமிற்கு பாபநாசம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ம. சோழராஜன் தலைமை வகித்தார். வட்டார உழவர் ஆலோசனைக் குழுத் தலைவர் ஆர். ராஜகோபால் முகாமை தொடங்கிவைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பி. ஜெயபிரபா வரவேற்றார்.

வட்டார வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர்கள் எஸ். ஞானசம்பந்தம், ஏ. சாமிநாதன் ஆகியோர் நுண்ணீர் பாசன பராமரிப்பு குறித்து தொழில்நுட்ப விளக்கம் அளித்தனர். வட்டார வேளாண் அலுவலர் பா. கார்த்திகேயன் குறுவை சாகுபடி திட்டம் குறித்து விளக்கம் அளித்தார். ஜெயின் இரிகேஷன் நிறுவன விற்பனை அதிகாரி குணசேகரன் இந்தத் திட்டம் குறித்து காணொலி காட்சி மூலம் பயிற்சி அளித்தார்.

இதில், முன்னோடி விவசாயிகள் சரபோஜிராஜபுரம் சண்முகம், திருவைகாவூர் டி.ஜி. ராஜேந்திரன் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் வேதநாராயணன் நன்றி கூறினார். உதவித் தொழில்நுட்ப மேலாளர் தனசேகரன் உள்ளிட்டோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## 32,000 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி

தஞ்சாவூர் மாவட்டத்தில் 32,000 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்றார் வேளாண்மைத் துறை துணை இயக்குநர் என். இளஞ்செழியன்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் அவர் பேசியது: மாவட்டத்தில் 2016-17 ஆம் ஆண்டுக்கு குறுவை பருவத்தில் 43,000 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில், இதுவரை 32,010 ஹெக்டேரில் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், திருந்திய நெல் சாகுபடி முறையில் 28,806 ஹெக்டேரில் நடவு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.மேலும், நிகழ் சம்பா பருவத்துக்குத் தேவையான விதைநெல் ரகங்களான சாவித்திரி 210 டன், கோ.ஆர்.-50 428 டன், சுவர்ணா சப் 100 டன், பிபிடி 50 டன், ஆடுதுறை-46 265 டன், ஆடுதுறை-49 12 டன், ஆடுதுறை-39 82 டன் இருப்பில் உள்ளன.

பயறு வகை பயிர்கள் 11,650 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துப் பயிர்கள் 950 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தின் உரத் தேவைக்காக அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம், தனியார் விற்பனை நிலையங்களில் யூரியா 12,571 டன், டி.ஏ.பி. 4,425 டன், பொட்டாஷ் 4,050 டன், கூட்டு உரங்கள் 7,400 டன் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன என்றார் அவர்.

## நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை: சேர்வலாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் நீர்வரத்து அதிகரித்துள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்துள்ளது.

நிகழாண்டு தென்மேற்குப் பருவமழை உரிய நேரத்தில் தொடங்கியும் தொடர்ந்து பெய்யாததால் எதிர்பார்த்தவாறு அணைகளின் நீர்மட்டம் உயரவில்லை. அணைகளின் தற்போதைய நீர் இருப்பைக் கொண்டு கார் சாகுபடி முழுமைக்கும் தண்ணீர் வழங்குவதில் சிக்கல் எழுந்துள்ளது. இதனிடையே 2 நாள்களாக மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்துள்ளது.

வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை-41, பாபநாசம் கீழ் அணை-2, சேர்வலாறு அணை-6, மணிமுத்தாறு அணை-6.2, கடனாநதி அணை-6, ராமநதி அணை-5, கருப்பாநதி அணை-1, குண்டாறு அணை-29, அடவிநயினார் அணை-7, கொடுமுடியாறு அணை-25, கன்னடியன் அணைக்கட்டு-1.4, அம்பாசமுத்திரம்-1, தென்காசி-3, செங்கோட்டை-5, நான்குனேரி-4.5, களக்காடு- 36.2, மூலக்கரைப்பட்டி-3, பாளையங்கோட்டை-2 திருநெல்வேலி-7.5.

மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழை காரணமாக அணைகளின் நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1683.91 கனஅடி, சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 540 கனஅடி, கடனாநதி அணைக்கு 157 கனஅடி, ராமநதி அணைக்கு 40 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 43 கனஅடி, குண்டாறு அணைக்கு 16 கனஅடி, அடவிநயினார் அணைக்கு விநாடிக்கு 41 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்மட்டம் உயர்வு: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 72.90 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் 6.56 அடி உயர்ந்து 85.56 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 68.88 அடி, கடனாநதி அணை நீர்மட்டம் 1.40 அடி உயர்ந்து 59.90 அடி, ராமநதி அணை நீர்மட்டம் 63 அடி, கருப்பாநதி அணை நீர்மட்டம் 24.77 அடி, குண்டாறு

அணை நீர்மட்டம் 36.10 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 70.50 அடி, வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 17.85 அடி, நம்பியாறு அணை நீர்மட்டம் 12.04 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 25 அடியாக இருந்தது.

விவசாயம், குடிநீர்த் தேவைக்காக பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து 1054.75 கனஅடி, மணிமுத்தாறு அணையிலிருந்து பெருங்கால் பாசனத்துக்கு 75 கனஅடி, கடனாநதி அணையிலிருந்து 80 கனஅடி, ராமநதி அணையிலிருந்து 40 கனஅடி, அடவிநயினார் அணையிலிருந்து 25 கனஅடி, குண்டாறு அணையிலிருந்து உபரிநீர் 16 கனஅடியும் திறந்து விடப்பட்டுள்ளது.

**"தென்னை மர காப்பீட்டுத் திட்டம்: விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்'**

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள், தென்னை மர காப்பீட்டுத் திட்டத்தில் சேரலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) இல.பெருமாள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருநெல்வேலி மாவட்டத்தில் 15 ஆயிரத்து 548 ஹெக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வெள்ளம், புயல், வறட்சி, பூச்சிநோய் தாக்குதல், எதிர்பாராத தீ விபத்து, இயற்கை சீற்றங்களால் தென்னை மரங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டாலோ, முற்றிலும் பலன் கொடுக்காத நிலை ஏற்பட்டாலோ தென்னை மர காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்பீடு பெற முடியும்.

இத் திட்டத்தில் சேருவதற்கு சில தகுதிகள் உள்ளன. தனிப்பயிராகவோ, ஊடு பயிராகவோ, வரப்பில் வரிசையாகவோ வீட்டுத் தோட்டத்திலோ குறைந்தபட்சம் 5 மரங்களாவது பலன் தரக்கூடியதாக இருக்க வேண்டும். குட்டை மற்றும் ஒட்டு ரகங்கள் 4 ஆம் ஆண்டு முதலும், நெட்டை ரகங்கள் 7 ஆம் ஆண்டு முதல் 60 ஆம் ஆண்டு வரையிலும் காப்பீடு செய்யலாம். ஒரு ஹெக்டேருக்கு சுமார் 175 மரங்கள் மட்டுமே காப்பீடு செய்ய தகுதியாகும். விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள மரங்களின் எண்ணிக்கை, வயது, பராமரிப்பு முறை, இப்போதைய நிலை பற்றிய சுயஉறுதி முன்மொழிவு அளிக்க வேண்டும்.

இத்திட்டத்தின்படி 4 வயது முதல் 15 வயது வரையிலான மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ.900 இழப்பீடு பெற பிரீமியமாக ரூ.2.25, 15 முதல் 60 வயதுள்ள மரம்

ஒன்றுக்கு ரூ.1750 இழப்பீடு பெற பிரீமியமாக ரூ.3.50 மட்டும் செலுத்தினால் போதுமானது. பிரீமியத் தொகையினை வரைவோலையாக அஐஇ ர்ச் ஐய்க்ண்ஹ கற்க், அலஐந ஆஹய்ந் அஸ்ரீஸ்ரீர்ன்ய்ற் சர் 006010200018027 எடுத்து அதனுடன் கிராம நிர்வாக அலுவலர்களிடம் தென்னை சாகுபடி செய்ததற்கான பயிர் அடங்கல் 10 (1) பெற்று வேளாண்மைத் துறை அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த ஆண்டில் எந்த தேதியில் பிரீமியம் செலுத்தப்படுகிறதோ அதற்கு அடுத்த மாதம் 1 ஆம் தேதியில் இருந்து ஓராண்டுக்கு பாலிசி வழங்கப்படும். ஒவ்வொரு பாதிக்கப்பட்ட விவசாயியும் இழப்பீடு கோரிக்கை மனுவைப் பூர்த்தி செய்து பாதிக்கப்பட்ட நாள்களில் இருந்து 15 நாள்களுக்குள் வேளாண் காப்பீட்டு நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும். காப்பீடு செய்யப்பட்ட மரங்கள் 10 முதல் 30 ஆக இருந்தால் குறைந்தது 2 மரங்களும், 31 முதல் 100 ஆக இருந்தால் குறைந்தது 3 மரங்களும், 100-க்கும் மேற்பட்டதாக இருந்தால் குறைந்தது 4 மரங்களும் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மரங்களை அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா நிறுவனம், தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர்கள் ஆய்வு செய்து உரிய இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்வார்கள். இத் திட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் சேர்ந்து பயன்பெறலாம் என செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காளான் உற்பத்தி பயிற்சி

வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு காளான் உற்பத்தி குறித்த பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் கவிதா ஆகியோர், சிப்பிக் காளான் மற்றும் பால் காளான் உற்பத்தி தொழில் நுட்பங்கள், காளான் விதை உற்பத்தி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு உள்ளிட்ட காளான் வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கமளித்தனர்.

பயிற்சியில் 33 விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் இளைஞர்கள் உள்பட பலர் பங்கு பெற்றனர்.

காளான் உற்பத்தி பயிற்சி வகுப்புகள் மாதம் தோறும் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறுகிறது. பயிற்சியில கலந்து கொள்ள விரும்புவோர்

தங்களின் பெயர், முகவரி, மற்றும் செல்லிடப்பேசி எண் ஆகியவற்றை 04147 - 250001 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு, முன்பதிவு செய்து கொள்ளுமாறு திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா கேட்டுக் கொண்டார்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

### சூரிய உலர்த்தி அமைக்க விவசாயிகளுக்கு மானியம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில், சூரிய உலர்த்தி அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இதுகுறித்து, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபால் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண்மை பொறியியல் துறை மூலம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில், விவசாயிகள் சூரிய உலர்த்தி (சோலார் டிரையர்) அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், பாலிகார்ப்பனேட் சீட் மூலம் குடில் அமைத்து, அதற்குள் சூரிய ஒளி மூலம் பல்வேறு வகையான பழங்கள், காய்கறிகளை உலர செய்வதால் அவற்றை உபயோகப்படுத்தும் கால அளவு அதிகரிக்கிறது. சூரிய உலர்த்திகள் அமைக்க விரும்பும் விவசாயிகளின் நிலத்தில், 600 சதுர அடி பரப்பில், தட்டு மற்றும் டிராலி அமைக்கப்படுகிறது. மொத்தமாக, ஆறு லட்சம் ரூபாயில், 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள், தனி செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை, 311, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (மகளிர் காவல் நிலையம் அருகில்) கிருஷ்ணகிரி என்ற அலுவலகத்தையும், ஓசூர், தேன்கனிக்கோட்டை, சூளகிரி தாலுகா விவசாயிகள், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு,

சென்னசக்கிரம், ஒசூர் என்ற அலுவலகத்தையும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தமிழக விவசாயிகள் சங்க கிளை துவக்கம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த சவூளூர் கிராமத்தில், தமிழக விவசாயிகள் சங்க கிளை துவக்க விழா நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் அடுத்த, மிட்டஅள்ளி பஞ்சாயத்திற்கு உட்பட்ட சவூளுர் கிராமத்தில், தமிழக விவசாயிகள் சங்க கிளை சங்க துவக்க விழா நடந்தது. மத்திய மாவட்ட செயலாளர் ராஜா தலைமை வகித்தார். தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் ராமகவுண்டர், உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கி பேசினார். சவூளூர் கிராமத்திற்கு, ஒகேனக்கல் கூட்டு குடிநீர் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாநில மகளிர் அணி தலைவி பெருமா, சங்க நிர்வாகிகள் மாரியப்பன், ஜோதி கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தோட்ட கலைத்துறை சிறப்பு முகாம்

பெருந்துறை: பெருந்துறை வட்டாரத்தில், தோட்டக்கலைத் துறையின் திட்டப்பணிகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் விண்ணப்பங்கள் சேகரிக்கும் சிறப்பு முகாம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடந்தது. தோட்டக்கலை உதவி இயக்குனர் குரு சரஸ்வதி திட்டங்களை விளக்கியும், மானியங்கள் குறித்தும் பேசினார். வேளாண் உதவி இயக்குனர் வாசுதேவன், திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். திட்டங்களில் பயன்பெற விவசாயிகள் ஆர்வமுடன் விண்ணப்பித்தனர்.

## கோபியில் 28 மி.மீ., மழை

கோபி: கோபியில், நேற்று அதிகபட்சமாக 28 மி.மீ., மழை, பெய்தது. கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு, 12 மணி முதல், நேற்று அதிகாலை வரை பலத்த மழை பெய்தது. காலை, 8 மணி நிலவரப்படி, அதிகபட்சமாக கோபியில், 28 மி.மீ., மழை கொட்டியுள்ளது. இதேபோல் கொடிவேரியில், 14.4 மி.மீ., சத்தியமங்கலத்தில், 6, கவுந்தப்பாடியில், 24,

பவானிசாகரில் 4.2, குண்டேரிப்பள்ளத்தில், 20, பெரும்பள்ளத்தில், 15.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

**பாக்கு விளைச்சல் சீசன் துவக்கம்: மட்டைக்கு தட்டுப்பாடால் விலை உயர்வு**

கரூர்: பாக்கு மரத்தில் இருந்து காய்ந்து விழும் மட்டைகளை கொண்டு தட்டுகள் தயாரிக்கும் பணி கடந்த, 10 ஆண்டுகளுக்கு மேலாக பிரபலம் அடைந்து வருகிறது. இவை, திருமணம், கோவில் திருவிழா உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் உணவு பரிமாற பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில், பாக்கு விளைச்சல் துவங்கியுள்ளதால், மட்டைக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், மட்டைக்கு விலை உயர்ந்துள்ளது.

இதுகுறித்து, வாங்கல் பாக்கு தட்டு உற்பத்தியாளர்கள் கண்ணன், ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் கூறியதாவது: சேலம் மாவட்டம், வாழப்பாடி பகுதிகளில் இருந்தும், கர்நாடகா மாநிலம் டிம்கூர் பகுதிகளிலும் இருந்தும், பாக்கு மட்டைகள் வாங்கி வருகிறோம். வழக்கமாக ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் பாக்கு காய் உற்பத்தி துவங்கும். இதனால், மட்டைகள் விற்பனைக்கு கிடைக்காது. சிறிய மட்டைகள் தான் விற்பனைக்கு வரும். கடந்த ஜூனில், இரண்டு ரூபாய்க்கு விற்ற மட்டை தற்போது இரண்டு ரூபாய், 50 காசுக்கு கிடைக்கிறது. மட்டைகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூன்று ரக மெஷின்களின் விலையும், 15 ஆயிரம் முதல், 25 ஆயிரம் ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இதனால், நான்கு இன்ச் தட்டு, 30 காசில் இருந்து, 40 காசுக்கும், ஆறு இன்ச் தட்டு, 60 காசில் இருந்து, 70 காசுக்கும், எட்டு இன்ச் தட்டு, 1.50 ரூபாயில் இருந்து, 1.60 ரூபாய்க்கும், பத்து இன்ச் தட்டு, 2.45 ரூபாயில் இருந்து, 300 ரூபாய்க்கும், 12 இன்ச் தட்டு, 3.50 ரூபாயில் இருந்து, நான்கு ரூபாய்க்கும் விலை அதிகரித்துள்ளது. மேலும், ஆடி மாதங்களில் அதிகமாக சுபவி ?ஷசங்கள் இல்லாததால், பாக்கு மட்டைக்கு அதிக விலை கொடுத்து, தட்டை உற்பத்தி செய்து, 'ஸ்டாக்' வைத்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மாவட்டத்தில் 1.50 மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி இலக்கு

கரூர்: கரூர் மாவட்டத்தில், நடப்பாண்டு, 1.50 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, வேளாண் கூட்டத்தில், டி.ஆர்.ஓ., அருணா கூறியதாவது: உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திட, தமிழக அரசு பல நடவடிக்கை எடுத்து வருகிறது. நடப்பாண்டு கரூர் மாவட்டத்தில், 1.50 மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் சான்று பெற்ற நெல் ரக விதைகளான, பி.பி.டி., கோ-50, கோ-51, ஏ.டி.டி.,49, என்.எல்.ஆர். ஆகியவை, 163 மெட்ரிக் டன், பயறு வகை விதைகள், 13.9 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பயறு வகை திட்டத்தில் கிலோவுக்கு, 25 ரூபாய் மானியத்தில் வினியோகம் செய்யப்படுகிறது. அனைத்து தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் யூரியா - 1,225 மெட்ரிக் டன், டி.ஏ.பி.,- 407 மெட்ரிக்டன், பொட்டாஷ் -558 மெட்ரிக் டன், கலப்பு உரம்-1029 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. ஆன்ட்ராய்டு மொபைலில் கிஸான் சுவேதா மொபைல் ஆப்ஸ் பதிவிறக்கம் செய்து, அதன் மூலம் விளை பொருட்களுக்கான சந்தை நிலவரம், ஏற்றுமதி விவரம், உரங்கள் பற்றிய விவரம் ஆகியவற்றை விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கரூர்: கரூர் மாவட்டத்தில், நடப்பாண்டு, 1.50 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தந்த மழை

ஆண்டிபட்டி, ஆண்டிபட்டியில் மூன்று நாட்களாக தொடரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆண்டிபட்டி ஒன்றியத்தின் பல்வேறு கிராமங்களில் மழையை மட்டுமே நம்பி ஆயிரக்கணக்கான ஏக்கர் மானாவாரி நிலங்கள் உள்ளன. கடந்த சில மாதங்களாக விவசாயம் இல்லாத நிலங்கள் கடும் வெயில், புழுதியை கிளப்பும் வறண்ட காற்று இவற்றால் பாதிப்படைந்திருந்தன. சில நாட்களுக்கு முன் பெய்த மழையில் சில விவசாயிகள் உழவுப்பணிகள் செய்தனர்.

இந்நிலையில் கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழையால் ஓடைகளில் நீர் வரத்து இல்லை. இருப்பினும் நிலங்களுக்கு புத்துயிரூட்டவும், தொடர் உழவுக்கும் மழை பயனுள்ளதாக அமைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். காய்ந்து கிடந்த மேய்ச்சல் நிலங்களில் பசுமை படரத்துவங்கியுள்ளதால்,கால்நடை தீவனத்தேவைகள் ஓரளவுபூர்த்தியாகும் நிலை உள்ளது.

## விளைச்சல் பாதிப்பால் விலை உயர்ந்தது மல்லிகை

ஆண்டிபட்டி, டர் மழையால் ஆண்டிபட்டியில் மல்லிகை விளைச்சலுக்கு பாதிப்பு ஏற்பட்டு விலை உயர்ந்தது. ஆண்டிபட்டி அருகே டி.ராஜகோபாலன்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம்,திம்மரசநாயக்கனுார், ஏத்தக்கோயில், அனுப்பபட்டி, மஞ்சிநாயக்கன்பட்டி, சித்தார்பட்டி, கதிர்நரசிங்கபுரம் உட்பட பல பகுதிகளில் மல்லிகை சாகுபடி உள்ளது.

கோடை காலம் மல்லிகை விளைச்சலுக்கு சாதகமாக இருந்ததால் கடந்த சில மாதங்களாக மல்லிகை வரத்து அதிகம் இருந்தது. சில மாதங்களுக்கு முன் மல்லிகை வரத்து மிகவும் அதிகமானதால் விலை சரிந்து விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பானது. பூக்களை விவசாயிகள் குறைந்த விலைக்கு சென்ட் தயாரிப்புக்கு அனுப்பினர்.

இந்நிலையில் ஆண்டிபட்டி பகுதியில் வெயில் தாக்கம் குறைந்தது. மூன்று நாட்களாக தொடரும் மழையால் பூக்கள் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பூக்கள் சிறுத்தும், சொத்தைப்பூக்கள் அதிகரித்தும் உள்ளது. வரத்து குறைந்ததால் கடந்த சில நாட்களாக கிலோ ரூ. 100 முதல் 150 வரை இருந்த மல்லிகை பூக்கள் நேற்று கிலோ ரூ.300 வரை உயர்ந்தது. விலை உயர்ந்தாலும் வரத்து குறைவு விவசாயிகளுக்கு சாதகமாக இல்லை.

## வடமாநில துவரம் பருப்பு வரத்து அதிகரிப்பு: தமிழகத்தில் குவிண்டாலுக்கு ரூ.500 விலை சரிவு

சேலம்: வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் துவரம் பருப்பின் வரத்து அதிகரித்ததை அடுத்து, குவிண்டாலுக்கு, 500 ரூபாய் விலை சரிந்துள்ளது.

தமிழகத்துக்கு தேவையான துவரம் பருப்பு, மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்திரபிரதேசம், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தே விற்பனைக்கு வருகிறது. இம்மாநிலங்களில் தற்போது பருவமழையின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் இருப்பு வைத்திருந்த துவரையை அதிக அளவில் விற்பனை செய்து வருகிறது. துவரையின் வரத்து அதிகரித்துள்ளதால், மில்களில் துவரம் பருப்பின் உற்பத்தி அதிகரித்துள்ளது. தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் துவரம் பருப்பின் வரத்தும் அதிகரித்துள்ளது. கடந்த மாதம் வரை, வாரத்துக்கு, 100 லாரிகளில் விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த துவரம் பருப்பு, தற்போது, 150 லாரிகளாக அதிகரித்துள்ளது. வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து, துவரம் பருப்பு, குவிண்டாலுக்கு, 500 ரூபாயும், கிலோவுக்கு, ஐந்து ரூபாய் வரை விலை சரிவு ஏற்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட மளிகை உரிமையாளர்கள் சங்க தலைவர் பெரியசாமி கூறியதாவது: வடமாநிலங்களில் பெய்து வரும் மழையால், விவசாயிகள் இருப்பு துவரையை விற்பனை செய்யத் துவங்கி உள்ளதால், அதன் வரத்து அதிகரித்துள்ளது. கனடா, மியன்மார் உள்ளிட்ட நாடுகளில் இருந்து விற்பனைக்கு வரும் துவரம் பருப்பின் வரத்தும் அதிகரித்துள்ளதால், அதன் விலை சரிவு ஏற்பட்டுள்ளது. துவரம் பருப்பு விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மானாமதுரை விவசாயிகளுக்கு34 டன் விதை நெல் ஒதுக்கீடு**

மானாமதுரை, :மானாமதுரையைச் சுற்றியுள்ள முத்தனேந்தல், இடைக்காட்டூர் உள்ளிட்ட 43 வருவாய் கிராமங்களில் ஆறாயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

பருவ மழையை பொறுத்து நெல் சாகுபடி பரப்பளவு கூடுவதும் குறைவதுமாக உள்ளது. இந்தாண்டிற்கான மழை தற்போது தொடங்கியுள்ளதால் விவசாயி களுக்கு விதை நெல் மானாமதுரை உதவி வேளான் நிலையத்தில் விவசாயிகளுக்கு மான்யத்துடன் விற்பனை செய்யப்படுகிறது.இந்தாண்டு மதிப்பு கூட்டப்பட்ட கோ 51,கோ 50,அன்னா 4,ஏ.டி.டீ.49 போன்ற நெல் ரகம் 34 டன் வரவழைக்கபட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மூடை (50கிலோ) விதை நெல் மானியம் போக 910 ரூபாய் என விற்பனை செய்யப் படுகிறது.உதவி வேளாண் அலுவலர் நீதிபதி கூறுகையில்: ஒரு ரகம் அதிக பட்சமாக 10 ஆண்டு விற்பனை செய்யப்படும். ஐ.ஆர்.36 அறிமுகப்படுத்தப்பட்டு 10 ஆண்டுகளாகி விட்டபடியால் தற்போது கோ 50,கோ 51,அன்னா 4,ஏ.டி.டீ.49 போன்ற ரகங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த ரகங்கள் அனைத்தும் 81சதவிகிதம் முளைப்பு திறன் கொண்டவை. மானாமதுரை தாலுகாவில் 2 ஆயிரத்து 850 எக்டேரில் நேரடி நெல் விதைப்பு செய்யப்படுகிறது, என்றார்.

**மாவட்டத்தில் தொடர் மழை: பாலக்கோடு விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பாலக்கோடு சுற்றுவட்டார பகுதியில் பெய்த கன மழை காரணமாக, அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த நான்கு நாட்களாக இரவு நேரத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், வானம் பார்த்த பூமியில் நிலத்தடிநீர் மட்டம் உயர்ந்து வருகிறது. மேலும், காய்ந்து கிடைந்த பூமியில் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, மாவட்டத்தில் அதிகபட்சமாக பாலக்கோட்டில், 71 மி.மீட்டர் மழை பெய்தது. இதையடுத்து, மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு: அரூர், 63.02 மி.மீட்டர், தர்மபுரி, 30 மி.மீட்டர், ஒகேனக்கல், 22.6 மி.மீட்டர், மாரண்டஅள்ளி, 22 மி.மீட்டர், பாப்பிரெட்டிப்பட்டி, 20 மி.மீட்டர்,

பென்னாகரம், 17 மி.மீட்டர் மழை பெய்தது. மாவட்டத்தில் பாலக்கோடு மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் அதிக அளவில் பணப்பயிர்களான கரும்பு மற்றும் வாழை, தக்காளி ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது. பெரும்பாலும் நிலத்தடி நீரை கொண்டு இங்கு பணப்பயிர்கள் சாகுபடி செய்வதால், பருவகாலங்களில் இங்கு மழை பெய்தால் மட்டுமே விவசாயம் நடக்கும். இதன்படி, இந்தாண்டு பாலக்கோடு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நல்ல மழை பெய்து வருவதால், வரும் பருவத்தில் அனைத்து பயிர்களையும் சாகுபடி செய்யலாம் என்ற நிலையில், அந்தபகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் கனமழை

அரூர்: அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு கனமழை பெய்தது. இந்த கனமழையால் வயல்களில் தண்ணீர் தேங்கியதுடன் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய டவுன் பஞ்சாயத்து பகுதிகளில் சாக்கடை கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டு, மழை நீருடன் சாக்கடை கலந்து தெருக்களில் ஒடியது. மாவட்டத்தில் அதிகளவாக அரூரில், 63.20 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. பாப்பிரெட்டிப்பட்டியில், 20 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தற்போது பெய்த மழை காரணமாக மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதுகுறித்து, வேளாண் கூட்டத்தில், டி.ஆர்.ஓ., அருணா கூறியதாவது: உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திட, தமிழக அரசு பல நடவடிக்கை எடுத்து வருகிறது. நடப்பாண்டு கரூர் மாவட்டத்தில், 1.50 மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் சான்று பெற்ற நெல் ரக விதைகளான, பி.பி.டி., கோ-50, கோ-51, ஏ.டி.டி.,49, என்.எல்.ஆர். ஆகியவை, 163 மெட்ரிக் டன், பயறு வகை விதைகள், 13.9 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பயறு வகை திட்டத்தில் கிலோவுக்கு, 25 ரூபாய் மானியத்தில் வினியோகம்

செய்யப்படுகிறது. அனைத்து தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் யூரியா - 1,225 மெட்ரிக் டன், டி.ஏ.பி.,- 407 மெட்ரிக்டன், பொட்டாஷ் -558 மெட்ரிக் டன், கலப்பு உரம்-1029 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. ஆன்ட்ராய்டு மொபைலில் கிஸான் சுவேதா மொபைல் ஆப்ஸ் பதிவிறக்கம் செய்து, அதன் மூலம் விளை பொருட்களுக்கான சந்தை நிலவரம், ஏற்றுமதி விவரம், உரங்கள் பற்றிய விவரம் ஆகியவற்றை விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெங்காயத்தில் நோய் நிர்வாகம் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி : ஆகஸ்ட் 3ல் நடக்கிறது

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், சின்ன வெங்காயத்தில் பூச்சி நோய் நிர்வாகம் குறித்த ஒருநாள் பயிற்சி, வரும் ஆகஸ்ட் 3ம் தேதி நடக்கிறது. இதுகுறித்து மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் சின்ன வெங்காயத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம், அதன் வளர்ப்பு தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி ஆகஸ்ட் 3ம் தேதி (புதன்கிழமை) காலை 9 மணிக்கு நடக்கிறது. இப்பயிற்சியில் விதை நேர்த்தி, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடைக்கு பின் விதை வெங்காயம் சேமிப்பு போன்றவை பற்றிய பயிற்சி அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் என ஆர்வமுள்ள அனைவரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புபவர்கள், நாமக்கல் - மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல்

நிலையத்திற்கு நேரில் வந்து, வரும் ஆகஸ்ட்,2ம் தேதிக்குள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## வேளாண் விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானிய விலையில் ஆமணக்கு வழங்கும் திட்டம் : விவசாயிகளுக்கு அழைப்பு

நாமக்கல்: நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மைய அலுவலகத்தில் முதன் முதலாக ஆமணக்கு வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் பயறு வகை சாகுபடி குறைந்துள்ளதால், இந்த ஆண்டை சர்வதேச பயறுவகை ஆண்டாக மத்திய அரசு அறிவித்துள்ளது. நாடு முழுவதும் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் வகையில், பல்வேறு திட்டங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. அதன்படி, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ் வரப்பு பயிராக ஒரு விவசாயிக்கு 2 கிலோ ஆமணக்கு விதை வழங்கப்படும். நாமக்கல் மாவட்டத்தில் தற்போது இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஆமணக்கு விதை வழங்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து, நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மாயக்கிருஷ்ணன் கூறியதாவது: நாமக்கல் வட்டார வேளாண் அலுவலகத்தின் மூலம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ஒரு பகுதியாக, எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ் விதைப்பு இயந்திரத்தின் மூலம் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மானிய விலையில் உயிர் உரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நிலக்கடலையில் ஊடுபயிராக விளைவிக்க பயறு வகை விவசாயிகளுக்கு ஆமணக்கு வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 2 கிலோ ரூ. 306க்கு என 50சதவீத மானிய விலையில் ஆமணக்கு விதை வழங்கப்படுகிறது. இதையே வெளியில் விவசாயிகள் வாங்கினால் ரூ.606 செலவிட நேரிடும். எனவே, மானிய விலையில் அரசு வழங்கும் ஆமணக்கு விதையை வரப்புப் பயிராக பயிரிட்டு, விவசாயிகள் பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண் அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மாவட்டத்தில் 245 மி.மீ மழை பதிவு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் ஒரே நாளில் 245 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாலை மற்றும் இரவு நேரத்தில் மழை பெய்து வருகிறது. இந்த மழையை பயன்படுத்தி, விவசாயிகள் ஆடிப்பட்ட விவசாய பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த மழை அளவு விபரம்: தர்மபுரி 30 மி.மீ, அரூர் 63.20 மி.மீ, பாப்பிரெட்டிப்பட்டி 20 மி.மீ, பாலக்கோடு 71 மி.மீ, பென்னாகரம் 17 மி.மீ, ஒகேனக்கல் 22.60 மி.மீ, மாரண்டஅள்ளி 22 மி.மீட்டர். இதன்மூலம் மொத்தம் 245.80 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது.

## தொடர் மழை எதிரொலி : 10 ஆண்டுக்கு பின்பு பாகூர் ஏரி நிரம்பியது

ஓசூர்: ஓசூரில், தொடர் மழை எதிரொலியாக பாகூர் ஏரி நிரம்பி வழிகிறது. மேலும், உடையும் அபாயத்தால் பீதி ஏற்பட்டுள்ளது. ஓசூர் அருகே தமிழக- கர்நாடக மாநில எல்லையில் பாகூர் ஏரி உள்ளது. கர்நாடக மாநிலத்தில் பெய்த கனமழையால் பாகூர் ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால், ஏரியின் நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்தது. நேற்று முழு கொள்ளளவை எட்டியதால் தண்ணீர் நிரம்பி வழிந்தது.10 ஆண்டுக்கு பின்பு ஏரி நிரம்பியுள்ள நிலையில் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதேவேளையில் சரியான பராமரிப்பின்றி ஏரிக்கரை பழுதடைந்து காணப்படுகிறது. இதனால், பல்வேறு இடங்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால், ஏரி உடையும் அபாயத்தால் பீதி ஏற்பட்டுள்ளது. ஏரிக்கரையோரம் வசிக்கும் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: 10 ஆண்டுக்கு பின்பு ஏரி நிரம்பியுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளாக ஏரியை சரியாக பராமரிக்காமல் விட்டதால் கரைகள் சிதிலமடைந்து காணப்படுகிறது. இதனால், எப்போதும் வேண்டுமானாலும் உடையக்கூடிய நிலையில் உள்ளது. எனவே, வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணித்துறையினர் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு பாகூர் கிராம மக்கள் தெரிவித்தனர்.

## நீர்வள மேலாண்மை தொழில்நுட்பம் குறித்த பயிற்சி

ஊட்டி, : தோட்டக்கலைத்துறையின் ஊட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டம், 2016-17 வேளாண்மை விரிவாக்க இயக்கம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை, பிரதான் மந்திரி கிஸான் சஞ்சய் யோஜனா திட்டத்தின் மூலம் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தோட்டக்கலையில் உள்ள புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளை சென்றடைந்து அதன்மூலம் உற்பத்தியை இரு மடங்காக அதிகா ரித்து வருமானத்தை மும்மடங்காக பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உள் மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கான மண் மற்றும் நீர்வள மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த முகாம் பாலகொலா கிராமத்தில் நடந்தது. ஊர்தலைவர் ஜோகி மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் ஊட்டியில் உள்ள இந்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு நிறுவனம் ஆராய்ச்சி மைய விஞ்ஞானி கண்ணன் கலந்து கொண்டு மண்வள பாதுகாப்பு, படிமட்டங்கள் அமைப்பது, உள் வட்ட படிமட்டங்கள் அமைத்து மண் அரிமானத்தை தடுத்து பயிர் சாகுபடி பரப்பை அதிகரித்தல் குறித்து பேசினா ா . ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் உரங்கள் பயன்படுத்துவது குறித்தும், நேரடி உரம் பயன்படுத்துவது குறித்தும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜான்பாஸ்கோ பிரதீப் விளக்கினார். zஉதவி தோட்டக்கலை அலுவலர் ெஜகதீஸ், தோட்டக்கலைத்துறையில் நடைமுறையில் உள்ள மானிய திட்டங்கள் குறித்து பேசினார்.

## கேரட் விலை உயர்வு

கோத்தகிரி,: கோத்தகிரி, கேர்கம்பை, கூக்கல்துறை, மசகல் பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் கேரட், முட்டை கோஸ், பீட்ரூட், பீன்ஸ், உருளைகிழங்கு போன்ற மலைக்காய்கறிகள் பயிரிட்டு வருகின்றனர். தொடர்மழை காரணமாக கேரட் சாகுபடி முடிந்து அறுவடைக்கு தயாராக உள்ளது. இந்நிலையில் கேரட் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரை விற்கப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.இதையடுத்து கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் கேரட் அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

## தேயிலை மகசூலுக்கு டாலமைட் இடுவது அவசியம்

மஞ்சூர்,: நீலகிரி மாவட்டம் குந்தா மண்டல தேயிலை வாரிய உதவி இயக்குனர் ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

விவசாயிகள் தங்களது தேயிலை தோட்டங்களில் ஒவ்வொரு கவாத்து சுழற்சியின் போதும் 5 ஆண்டுக்கு ஒருமுறை மண் பரிசோதனை செய்து அதன் கார,அமில நிலைக்கு ஏற்றார் போல் கவாத்து செய்வதற்கு முன்பாக டாலமைட் இடுவது அவசியமாகும். பல ஆண்டுகளாக தொடர்ந்து ரசாயன உரங்களை தேயிலை தோட்டங்களுக்கு இட்டு வந்ததன் விளைவாக மண்ணின் அமிலதன்மை அதிகரித்து மண் கடினமடைந்து இறுகி விடுவதால் காற்றோட்ட தன்மை குறைகிறது. இதனால் மண்ணின் நீர் பிடிப்புத் தன்மையும் குறைந்து விடுவதுடன் மண்ணில் இடப்படும் உரங்கள் போதுமான அளவு வேர்களால் கிரகித்துக் கொள்ள முடியாமல் உரங்கள் வீணாகிறது. எனவே ஒவ்வொரு கவாத்து சுழற்சியின் போதும் மண்ணை பரிசோதனை செய்து அதன் கார அமில நிலைக்கு ஏற்ப டாலமைட் இடுவதால் மண்ணின் தன்மை மேம்படும். இதனால் நீர் பிடிப்பு தன்மை அதிகரிப்பதோடு இடப்படும் உரங்கள் மண்ணில் நிலை நிறுத்தி தொடர்ந்து தேயிலைக்கு கிடைக்க ஏதுவாகிறது. மேலும் மண்ணின் கார அமில நிலை சரியான அளவில் வைத்து கொள்வதால் தேயிலை மகசூல் உற்பத்தி அதிகரிக்கிறது. மண் பரிசோதனை செய்ய முடியாத பட்சத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 1 டன் டாலமைட்டை மண்ணில் பரவலாக தூவி விடுதல் அவசியமாகும். காவத்து செய்வதற்கு முன்னர் டாலமைட் தேயிலை தோட்டங்களுக்கு இடுவதால் நுண்ணுயிரிகளின் செயல் திறன் ஊக்குவிக்கப்படுவது மட்டுமில்லாமல் சிறிய தாதுக்கள், இலைகள் மட்குவதற்கு துணை புரிகின்றது. டாலமைட் இடுவதற்கும், ரசாயன உரங்கள் இடுவதற்கும் குறைந்தபட்சம் 45 நாட்கள் இடைவெளி இருத்தல் அவசியமாகும். மேலும் கூடுதல் விவரங்களுக்கு உதவி இயக்குனர் தேயிலை வாரிய குந்தா மண்டல அலுவலகத்தை விவசாயிகள் அனுகலாம் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## பழனி அருகே வரதமாநதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு



பழனி,

பழனி அருகே வரதமாநதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>தண்ணீர் திறப்பு</u>

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே வரதமாநதி அணை உள்ளது. இந்த அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்தார்.

அதன்பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் மருதராஜ் ஆகியோர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீரை திறந்து விட்டனர். சீறிப் பாய்ந்த தண்ணீரில் அவர்கள் மலர் தூவி வரவேற்றனர்.

நேற்று முதல் வருகிற செப்டம்பர் மாதம் 11–ந்தேதி வரை பழனி வையாபுரி குளத்துக்கு வினாடிக்கு 60 கனஅடி வீதம் 3 நாட்களும், இடும்பன் குளத்துக்கு வினாடிக்கு 5 கன அடி வீதம் வாரத்துக்கு 3 நாட்களும், பழனி வாய்க்கால் பாசனத்துக்கு வினாடிக்கு 5 கனஅடி வீதம் வாரத்துக்கு 3 நாட்களும் என மொத்தம் 32.66 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது.

2,800 ஏக்கர் விவசாய நிலம்

இது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரன் கூறியதாவது:–

வரதமாநதி அணையின் உயரம் 66.47 அடி ஆகும். தற்போது அணையின் நீர்மட்டம் 48.52 அடியாக உள்ளது. வினாடிக்கு 10 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த அணையின் மூலம் 18 குளங்கள், 3 வாய்க்கால்கள் மூலம் 5 ஆயிரத்து 523 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

வரதமாநதி அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் மூலம் கிழக்கு ஆயக்குடி, மேற்கு ஆயக்குடி, எரமநாயக்கன்பட்டி, பழனி, சிவகிரிப்பட்டி, கலிக்கநாயக்கன்பட்டி, கோதை மங்கலம் ஆகிய பகுதிகளில் 2,800 ஏக்கர் விவசாய நிலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாசன வசதி பெறுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதில் முன்னாள் எம்.எல்.ஏ. வேணுகோபாலு, பழனி தாசில்தார் ராஜேந்திரன், நங்காஞ்சியாறு செயற்பொறியாளர் ஜெயராம், நகர்மன்ற துணைத்தலைவர் முருகானந்தம், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஏ.டி.செல்லச்சாமி, அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் முத்துச்சாமி மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

## ஏரி, குளங்களில் ஆக்கிரமிப்பு!




தமிழ்நாட்டில் தாமிரபரணி ஆற்றைத்தவிர, வேறு எந்த ஆறும் தமிழ்நாட்டில் உற்பத்தியாவது இல்லை. மற்ற ஆறுகளில் ஓடும் தண்ணீர் எல்லாம் அண்டைமாநிலங்களில் இருந்து கிடைக்கும் தண்ணீர் என்ற வகையில், அவ்வப்போது அந்த மாநிலங்களை நோக்கி பங்கீட்டு உரிமையை கேட்கவேண்டியதிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையும், தென்மேற்கு பருவமழையும் பெய்யும்போது, ஏராளமான தண்ணீர் சேமிக்கப்படாமல் கடலில் போய் கலக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்தில் தாமிரபரணி ஆற்றிலிருந்து கடலில்போய் கலக்கும் தண்ணீரை கணக்கிட்டால், அந்த தண்ணீரை மட்டும் சேமிக்க வசதியிருந்தால் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்கள் மட்டுமல்லாமல், அண்டை மாவட்டங்கள் கூட வளம் பெறமுடியும்.

சென்னையிலும், அதைச்சுற்றிலும் உள்ள பகுதிகளில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின்போது, கொசஸ்தலை ஆற்றில் மட்டும் ஒருவினாடிக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் கனஅடி தண்ணீர் சீறிப்பாய்ந்தது. பொதுவாக இந்த தண்ணீரை எல்லாம் முறையாக ஏரிகள், குளங்கள், கசிவுநீர் குட்டைகளில் தேக்கிவைத்தாலே தமிழ்நாட்டுக்கு தாராளமாக போதும். அந்தவகையில், தமிழக

அரசின் நீர்வளத்துறை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தோடு இணைந்து, அந்த மாவட்டத்தில் உள்ள ஏரிகளின் எல்லைகளை வரையறுத்துக்கொண்டு இருக்கிறது. அந்த ஏரிகளின் எல்லைகள் எந்த அளவுக்கு இருந்ததோ, அது இப்போது இருக்கிறதா?, ஆக்கிரமிப்புகள் எதுவும் செய்யப்பட்டிருக்கிறதா? என்பதை அளவெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் சோழவரம் ஏரியில் மட்டும் 120 கட்டிடங்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருக்கிறது. அதில், சில கட்டிடங்கள் 2 மாடி கட்டிடங்கள் என்பதை அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதுமட்டுமல்லாமல், கொரட்டூர், அம்பத்தூர் ஏரிகளில் மட்டும் 200 கட்டிடங்கள் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்படி ஒவ்வொரு ஏரியையும் எடுத்துக்கொண்டால், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 335 ஏரிகளிலும் நிச்சயமாக ஆக்கிரமிப்புகள் இருக்கும் என்று கூறப்படுகிறது. ‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பதுபோல, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நிலைமைக்கு, இந்த மாவட்டத்தில் எடுக்கப்படும் கணக்கீடே சான்றாகும்.

கோவையை சுற்றியுள்ள 24 ஏரிகளில் தனியார் மட்டுமல்லாமல், மத்திய–மாநில அரசுகளும் ஆக்கிரமிப்பு செய்துள்ளன என்று சென்னை ஐகோர்ட்டில் ஒரு வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், ஆர்.மகாதேவன் ஆகியோர் ஏரிகளின் ஆக்கிரமிப்பு குறித்து கோவை மாவட்ட கலெக்டர் விரிவான அறிக்கை தரவேண்டும். ஏரி, நிலங்களை வேறு எந்தவொரு பணிக்கும் அரசு பயன்படுத்தக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தனர். இந்த உத்தரவை இந்த ஒரு மாவட்டத்துக்கான உத்தரவாக மட்டும் நினைக்காமல், அனைத்து மாவட்ட கலெக்டர்களும் தங்கள் மாவட்டங்களுக்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவாக கருதவேண்டும்.

தமிழ்நாட்டில் 39 ஆயிரத்து 202 ஏரிகள் உள்ளன. இதில், 14 ஆயிரத்து 98 பெரிய ஏரிகள் நீர்வள ஆதாரத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இவைதவிர, ஏராளமான சிறுசிறு குளங்களும் இருக்கின்றன. கசிவுநீர் குட்டைகளும் ஏராளமாக இருக்கின்றன. சிறிய குளம் என்றாலும் சரி, அதில் முறையாக தண்ணீர் தேக்கிவைக்கப்பட்டால், அருகிலுள்ள நிலத்தடிநீர் மட்டம் நிச்சயமாக உயரும். எனவே, திருவள்ளூர் மாவட்டத்தைபோல, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட

கலெக்டர்கள் நீர்வளத்துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை ரெக்கார்டுகளில் ஒவ்வொரு ஏரி, குளம், குட்டை எவ்வளவு பரப்பளவில் இருக்கவேண்டும் என்பதை பார்த்து, அதே அளவு பரப்பு இப்போது இருக்கிறதா?, ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டு இருக்கிறதா? என்பதை கணக்கிடவேண்டும். ஆக்கிரமிப்புகளை தயவு, தாட்சண்யம் இல்லாமல் அகற்றவேண்டும். தமிழக அரசும் இந்த அதிரடி நடவடிக்கைக்கு ஏதாவது பலம்வாய்ந்த சட்டம் தேவையென்றால், அதற்கு தனியாக ஒரு சட்டத்தைகூட பிறப்பிக்கலாம். அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் ஏரிகளில் புனரமைப்பு பணிகள் செயல்படுத்தப்படும், தடுப்பணைகள் கட்டப்படும் என்று கூறியிருப்பதால், அரசு நிச்சயமாக இதில் அதிரடி நடவடிக்கை எடுக்கும் என்று பொதுமக்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பு இருக்கிறது.

## விவசாயிகள் செல்போன் மூலம் தங்களது விளை பொருட்களின் சந்தை நிலவரத்தை அறியலாம் கலெக்டர் தகவல்



கரூர்,

விவசாயிகள் செல்போன் மூலம் தங்களது விளை பொருட்களின் சந்தை நிலவரத்தை அறியலாம் என்று கலெக்டர் கூறினார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் (பொறுப்பு) அருணா தலைமை தாங்கினார். கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று மனுதாரர் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.20 மில்லி மீட்டர் ஆகும். நடப்பு ஜூலை மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழையான 194.3 மில்லி மீட்டருக்கு இது வரை 220.73 மில்லி மீட்டர் மழை கிடைக்கப்பெற்றுள்ளது. நடப்பாண்டு கரூர் மாவட்டத்தில் 1.50 லட்சம் மெகா டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திட தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் சான்று பெற்ற நெல் ரக விதைகளான பி.பி.டி–5204, கோ–50, கோ–51, ஏ.டி.டி.–49 மற்றும் என்.எல்.ஆர்.–34449 ஆகியவை 163 மெகா டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

கிலோ ஒன்றுக்கு ரூ.25 மானியம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்– நெல் இயக்கத்தின் மூலம் 10 வருடங்களுக்கு குறைவாக உள்ள ரகங்களான கோ–50, கோ–51, ஏ.டி.டி.–49 மற்றும் என்.எல்.ஆர்.–34449 ஆகிய நெல் விதைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியத்தில் விவசாயிகளுக்கு வினியோகிக்க தயார் நிலையில் உள்ளது. மேலும், பயறுவகை விதைகளான துவரை கோ(ஆர்.ஜி)–7 மற்றும் உளுந்து வம்பன்–5 ஆகிய விதைகளும், கோ–7 பாசிப்பயறு ஆகிய சான்று பெற்ற பயறு விதைகள் மொத்தம் 13.9 மெகா டன் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், பயறுவகை திட்டத்தின் கீழ் ஒரு கிலோவிற்கு ரூ.25 மானியத்தில் வினியோகம்செய்வதற்கு அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. எண்ணெய் வித்துப்பயிரான நிலக்கடலையில் கோ–6 சான்று பெற்ற விதைகள்

23.4 மெகா டன் இருப்பில் உள்ளது. தேசிய எண்ணெய் வித்துகள் இயக்கத் திட்டத்தின் கீழ் 15 வருடங்களுக்கு உட்பட்ட ரகங்கள் கிலோ ஒன்றுக்கு ரூ.25 மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

செல்போன் மூலம் அறியலாம்

எனவே, தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி சான்று பெற்ற விதைகளை பெற்று பயன்பெறலாம். மேலும் வரும் ஆடிப்பட்டத்திற்கு தேவையான காய்கறி விதைகள் மற்றும் பழச்செடிகள் விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது. விவசாயிகளின் ஆன்ட்ராய்டு செல்போனில் "கிஸான் சுவேதா மொபைல் ஆப்ஸ்" என்ற ஆப்சை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கான சந்தை நிலவரம், ஏற்றுமதி விவரம், உரங்கள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை பற்றி தெரிந்து கொள்ள வட்டார வாரியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். இதில் அரசு துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.